# இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்

**<u>இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் வெற்றிடம் நிலவும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை (07 வெற்றிடங்கள்) மற்றும் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை (04 வெற்றிடங்கள்) ஆகிய பதவிகளுக்கு இணைத்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரல்.</u>**

இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் வெற்றிடம் நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள <u>தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள</u> அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- அபிவிருத்தி உத்தியோகத்தர் (வெற்றிடங்களின் எண்ணிக்கை 07) - விஞ்ஞானத்துறை (பௌதிகவியல் விஞ்ஞானம் அல்லது உயிரியல் விஞ்ஞானம் ), சட்டத்துறை, வர்த்தகத்துறை அல்லது விஞ்ஞானப் (முகாமைத்துவப்) பட்டம் ஒன்றினைப் பெற்றுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி திணைக்களம் உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பு (WIPO) ஆசியப் பிராந்திய நாடுகளின் புலமைச் சொத்துக்கள் அலுவலகம் போன்ற உரிய வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்த வகையில் கடமைகளை நிறைவேற்றும் அரச திணைக்களம் ஒன்றாகும். ஆதலால் இவ்வலுவலகத்தில் புலமைச்சொத்துக்கள் விடயத்திற்கு உரிய பிரிவுகளில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு தமது கடமையின் தன்மைக்கு ஏற்ப வெளிநாட்டுப் பயிற்சிகள் / கருத்தரங்குகள் என்பவற்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பும் கிடைக்கப்பெறும். ஆங்கில மொழி மூலம் கடமைகளை நிறைவேற்றுவதற்கான இயலுமை விஷேட தகைமை ஒன்றாகக் கருதப்படும்.

- அரச முகாமைத்துவ உதவியாளர் – (பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 04 ஆகும்.)

மேற்படி திணைக்களத்தில் பணிபுரிவதற்கு விருப்பமான மேற்படி பதவிகளை வகிக்கும் <u>தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள்</u> தன்னால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் ஒன்றினை 2017.02.15 ஆந்திகதிக்கு முன்னர் பதவுத் தபாலில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியினைக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள சேவை நிலையத்திலிருந்து பதிலீட்டாளர் ஒன்றுடனோ அல்லது பதிலீட்டாளர் இன்றியோ விடுவிக்கப்பட முடியுமா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி :
புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் மா அதிபதி
இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்
“சமாகம் மெதுர”
3 ஆவது மாடி
இல 400
டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தை
கொழும்பு 10

தொலைபேசி இலக்கம்: **0112 689 368**

புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் மா அதிபதி
தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்